# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

## <u>M.C.O.P. No.297/2023</u>

PW1 பூபதி நாள் 03.09.2024

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுத படிக்கத் தெரியாது. கையெழுத்து போடுவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள பதிவு எண் கொண்ட வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு வாகன எண் தெரியாது. என் கணவர் மீது எந்த வகையான வாகனம் மோதியது என்று எனக்கு தெரியாது. பெரிய வண்டி தான் மோதியது. என் கணவரின் வயது 70 ஆகும். சம்பவ நடந்தது இரவு 06.30 மணி . நான் தாக்கல் செய்துள்ள மனுவில் சம்பவம் 07.00 மணிக்கு நடந்தது என்றும், காவல் நிலையத்தில் சம்பவம் 07.00 மணி என்று குறிப்பிட்டிருந்தால் தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் என் கணவரின் வயது 63 என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு. சம்பவம் நடந்த இடம் அருகில் கொட்டகை இருந்தது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ நடந்த இடத்திற்கு ரோட்டின் கிழக்கு பக்கத்தில் எங்களுக்கு காடு உள்ளது . காடு , காட்டிற்கு பக்கத்தில் வாரி, அதன் பக்கத்தில் ரோடு என்றால் சரிதான். என் கணவர் கருப்பு நிறத்தில் தான் இருப்பார். என் கணவர் சம்பவ சமயத்தில் மேல்சட்டை அணியவில்லை. நான் புகார் கொடுத்த புகாரில் என் கணவர் விவசாயம் செய்தததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் கொத்தனார் வேலை தான் செய்கிறார். என் கணவர் கொத்தனார் வேலை செய்தததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. கணவருடன் தான் வசிக்கிறார்கள். எனக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. என் கணவருக்கு கண்பார்வை சரியாக தெரியாது என்றும், சம்பவ நேரம் இரவு என்பதால், என் கணவர் காட்டில் இருந்து வாரியை தாண்டி ரோட்டில் ஏறும்போது சரியாக கவனிக்காமல் ரோட்டில் வந்த வண்டியில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. என் கணவரின் இறுதிசடங்கிற்கு ரூ.1,50,000/- செலவு ஆனது. என் கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனக்கு இழப்பீடு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.